சாரதா மாரியம்மன் கோயிலில் நவராத்திரி மஹா சண்டியாகம்

கோபி, அக்.14: கோபி கடைவீதியில் உள்ள சாரதா மாரியம்மன் கோயிலில் நவராத்திரியையொட்டி மஹா சண்டியாகம் புதன்கிழமை நடைபெற்றது.

முன்னதாக விநாயகர் பூஜையுடன் தொடங்கி தேவி மஹாத்மிய பாராயணம், சண்டி கலச ஆவாஹனம், கோமாதா பூஜை என 50-க்கு மேற்பட்ட மூலிகைகளைக் கொண்டு சிவாசாரியர்கள் தலைமையில் மஹா சண்டியாகம் நடைபெற்றது.

இதையடுத்து சாரதா மாரியம்மனுக்கு சுமங்கலிபூஜை, கன்யாவடுக பூஜை, மஹா தீபாராதனை உள்ளிட்டவை நடைபெற்றன. இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

அஸ்ஸாம் மாநிலத் தொழிலாளி அடித்துக் கொலை

மனைவி, உறவினர் தலைமறைவு

உதகை, அக்.14: உதகையில் அஸ்ஸாம் மாநிலத் தொழிலாளி புதன்கிழமை அடித்துக் கொலை செய்யப்பட்டார். இதில் தப்பிச்சென்ற இறந்தவரின் மனைவி மற்றும் அவருடைய தம்பியை போலீஸார் தேடி வருகின்றனர்.

நீலகிரி மாவட்டத்தில் கேரட் விவசாயப் பணிகளில் வட மாநிலத் தொழிலாளர்கள் அதிக அளவில் ஈடுபட்டுள்ளனர். இதற்காக அவர்கள் வீடு எடுத்து இங்கு குடும்பத்துடன் தங்கி பணியாற்றுகின்றனர்.

அஸ்ஸாம் மாநிலத்தைச் சேர்ந்தவர் பில்ராஜ் (30). இவர் கடந்த இரண்டு ஆண்டுகளாக உதகையை அடுத்த கேத்தி பகுதியில் தங்கி இருந்து கேரட் அறுவடை உள்ளிட்ட வேலைகளுக்கு சென்று வந்தார்.

இந்த நிலையில் தன்னுடைய அக்கா, அவரது கணவர் மற்றும் அவர்களது இரண்டு குழந்தைகளை கேரட் அறுவடைப் பணிக்காக சொந்த ஊரிலிருந்து கடந்த 12-ஆம் தேதி அழைத்து வந்தார். அக்காவின் கணவர் கொஞ்சம் மாற்றுத்திறனாளி என்பதால் அவர் வீட்டில் இருந்துள்ளார். பில்ராஜின் அக்கா மட்டும் வேலைக்கு சென்று வந்தார். இரண்டு குழந்தைகளையும் வீட்டில் வைத்து மாற்றுத்திறனாளி கணவர் பார்த்துக்கொண்டார்.

இந்த நிலையில் அவர்கள் வீட்டில் செவ்வாய்க்கிழமை இரவு குடும்ப தகராறு ஏற்பட்டுள்ளது. வாக்குவாதம் உண்டாகி அடிதடி சப்தம் வந்ததை அருகில் இருந்தவர்கள் கேட்டுள்ளனர். இதில் பில்ராஜ், தனது அக்காவின் கணவரை சரமாரியாக தாக்கியதாக கூறப்படுகிறது.

இந்நிலையில் அப்பகுதியினர் புதன்கிழமை காலை பில்ராஜ் வீட்டுக்கு சென்று பார்த்துள்ளனர். அப்போது அங்கு பில்ராஜின் அக்கா கணவர் காயங்களுடன் உயிரிழந்து கிடந்தது தெரியவந்தது. மேலும், பில்ராஜ், அவரது அக்கா மற்றும் குழந்தைகள் தலைமறைவானது தெரியவந்தது.

இதுகுறித்து அக்கம் பக்கத்தினர் கொடுத்த புகாரின்பேரில் கேத்தி காவல் ஆய்வாளர் சிவசங்கரி தலைமையிலான போலீஸார் வழக்குப் பதிவு செய்து தப்பி சென்றவர்களை தேடி வருகின்றனர். உயிரிழந்தவர் குடும்பம், கேத்தி பகுதிக்கு வந்து இரண்டு நாள்கள்தான் ஆனது என்பதால் அவர்களின் பெயர் உள்ளிட்ட விவரம் எதுவும் தெரியவில்லை என அப்பகுதியினர் கூறினர்.

பெருந்துறையில் ரூ. 4.24 கோடிக்கு கொப்பரை ஏலம்

பெருந்துறை, அக்.14: பெருந்துறை வேளாண்மை பொருள்கள் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் ரூ.4.24 கோடிக்கு கொப்பரை ஏலம் புதன்கிழமை நடைபெற்றது.

ஏலத்துக்கு, பெருந்துறை சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள், 6,399 மூட்டைகளில் 2 லட்சத்து 89 ஆயிரம் கிலோ கொப்பரையை விற்பனைக்குக் கொண்டு வந்திருந்தனர்.

இதில், முதல்தரக் கொப்பரை கிலோ ரூ. 152.99 முதல் ரூ.160.99 வரையிலும், இரண்டாம் தரக் கொப்பரை ரூ. 40.99 முதல் ரூ.145.10 வரையிலும் ஏலம் போனது. மொத்தம் ரூ. 4 கோடியே 24 லட்சத்துக்கு வர்த்தகம் நடைபெற்றது.

RELIGARE ரெலிகேர் பின்வெஸ்ட் லிமிடெட்
Values that bind
(RELIGARE FINVEST LTD.)
CIN:U74999DL1995PLC064132
பதிவு அலுவலகம்: முதல் தளம், அலுவலக எண்.101, 2E/23, ஜான்டேவாலன் விரிவு, புதுதில்லி - 110055
கிளை அலுவலகம்: 2வது தளம், "Aurum" கட்டிடம், எண்.9 கண்ணுசாமி ரோடு, RS புரம், கோயம்புத்தூர்-641002

APPENDIX-IV-A [See proviso to Rule 8(6) & proviso to Rule 9(1)]

அசையா சொத்துக்களின் விற்பனைக்கான அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச்சட்டம் 2002, பாதுகாப்பு நடைமுறை விதிகள் 2002 விதி எண். 8(6) & 9(1)-ன் கீழ் அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்களை இ - ஏல விற்பனை செய்தல்.

ரெலிகேர் பின்வெஸ்ட் லிமிடெட் (சுருக்கமாக 'RFL'), நிறுவனத்தில் அடமானத்தில் வைக்கப்பட்டுள்ள கீழ்கண்ட சொத்துக்களை ரெலிகேர் பின்வெஸ்ட் லிமிடெட் நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் நேரடியான சுவாதீனத்தில் (Physical Possession) எடுக்கப்பட்டு கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர்கள் / அடமானதாரர்கள் 1.செயின்ட் பால்ஸ் எஜிகேஷனல் அண்ட் சாரிடபிள் டிரஸ்ட், 2.G.ருபெல்லா, 3.D.விக்டர்ராஜா பாண்டியன் ஆகியோரிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டிய கடன்தொகையான 13.10.2026 அன்றுள்ளபடி ₹ 11,30,33,520.43 (ரூபாய் பதினோறு கோடியே முப்பது லட்சத்து முப்பத்து மூன்றாயிரத்து ஐநூற்று இருபது மற்றும் பைசா நாற்பத்து மூன்று மட்டும்) மற்றும் வட்டி, இதர செலவுகளை வசூலிப்பதற்காக கீழே குறிப்பிட்டுள்ள சொத்துக்களை "உள்ள இடத்தில் உள்ளவாறு", "உள்ளது உள்ளவாறு" மற்றும் "எந்த நிலையில் உள்ளதோ அந்த நிலையிலேயே" என்ற அடிப்படையில் இ-ஏலம் "Online Electronic Bidding" மூலம் https://www.bankeauctions.com/ என்ற இணையதளத்தில் 13.11.2026 அன்று காலை 10.30 மணி முதல் 11.30 மணி வரை கீழே குறிப்பிட்டுள்ள நேரத்தில் ஒவ்வொரு 5 நிமிட கால இடைவெளியில் விற்பனை செய்யப்படும் என இதன் மூலம் பொது மக்களுக்கும் மற்றும் குறிப்பாக கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

அசையா சொத்துக்கள் விவரம்

சொத்து எண்.1: ஈரோடு பதிவு மாவட்டம், கோபிசெட்டிப்பாளையம் ஜாயிண்ட் 1 சார் பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட கோபிசெட்டிப்பாளையம் தாலுகா, பாரியூர் கிராமம், பெரிய கோரைத்தோட்டம், பழைய சர்வே எண்.98 புதிய சர்வே எண்.94 படி புஞ்சை ஹெக்டேர் 6.43.5, பட்டா எண்.7 இதில் 2.50 ஏக்கர் நிலம், அதனுடன் கிணறு பகுதி மற்றும் இதர அனுபந்த உரிமைகள். எல்லைகள்: கிழக்கு: வண்டிப்பாதை, P.A.பழனிசாமிக்கு சொந்தமான தெற்கில் வடக்கு பக்க நிலம், மேற்கு: சின்னசாமி, ஆறுமுகம் குடும்பம்-க்கு சொந்தமான நிலம், தெற்கு: ராஜபாண்டியன் நிலம், வடக்கு: P.A.பழனிசாமிக்கு சொந்தமான நிலம். பரப்பு 2.50 ஏக்கர்.

சொத்து எண்.2: ஈரோடு பதிவு மாவட்டம், கோபிசெட்டிப்பாளையம் ஜாயிண்ட் 1 சார் பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட கோபிசெட்டிப்பாளையம் தாலுகா, பாரியூர் கிராமம், பெரிய கோரைத்தோட்டம், பழைய சர்வே எண்.98 புதிய சர்வே எண்.94 படி புஞ்சை ஹெக்டேர் 6.43.5 மற்றும் புதிய சர்வே எண்.91/2-ல் புஞ்சை ஹெக்டேர் 0.98.5 மொத்தம் புஞ்சை ஹெக்டேர் 7.42.0 பட்டா எண்.7 மற்றும் 157 இதில் 2.50 ஏக்கர் நிலம், கிணறு பகுதி, அதனுடன் 5 HP எலக்ட்ரிக் பம்ப் செட் மற்றும் இதர அனுபந்த உரிமைகள். எல்லைகள் கிழக்கு: விற்பவருக்கு சொந்தமான மீதமுள்ள நிலச்சொத்துகள், மேற்கு: ராசப்ப மணியக்காரர், ஆண்டவர் மற்றும் மற்றவர்களுக்கு சொந்தமான நிலம், தெற்கு: விக்டர் ராஜபாண்டியனுக்கு சொந்தமான நிலம், வடக்கு: கண்ணமங்கலம், பொன்னுசாமி கவுண்டர் மற்றும் குகனூர் விஷ்ணு கவுண்டர் மற்றும் மற்றவர்களுக்கு சொந்தமான நிலம். பரப்பு 2.50 ஏக்கர்.

சொத்து எண்.3: ஈரோடு பதிவு மாவட்டம், கோபிசெட்டிப்பாளையம் ஜாயிண்ட் 1 சார் பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட கோபிசெட்டிப்பாளையம் தாலுகா, பாரியூர் கிராமம், பெரிய கோரைத்தோட்டம், பழைய சர்வே எண்.98 புதிய சர்வே எண்.94 படி புஞ்சை ஹெக்டேர் 6.43.5, பட்டா எண்.7 இதில் 3.00 ஏக்கர் நிலம், கிணறு பகுதி, அதனுடன் 5 HP எலக்ட்ரிக் பம்ப் செட் மற்றும் இதர அனுபந்த உரிமைகள். எல்லைகள்: சின்னுசாமி, ஆறுமுகம் மற்றும் மற்றவர்களின் சொத்துக்கு கிழக்கு, பழனிசாமியின் மீதமுள்ள நிலத்திற்கு மேற்கு, மோகனசுந்தரம் மற்றும் சௌந்தராஜன்-ன் சொத்துக்கு தெற்கு, சண்முகம் மற்றும் மற்றவர்களின் சொத்துக்கு வடக்கு. பரப்பு 3.00 ஏக்கர்.

மூன்று சொத்துக்களின் மொத்த பரப்பு 8.00 ஏக்கர்.

குறைந்தபட்ச கேட்பு விலை: ₹ 12,98,34,272/-
டேவணித்தொகை (EMD): ₹ 1,29,83,427/-

இ-ஏல தேதி & நேரம் : 13.11.2026
காலை 10.30 மணி முதல் 11.30 மணி வரை
Portal of E-Auction: https://www.bankeauctions.com/

தெரிந்த வில்லங்கங்கள்

விற்பனை செய்யப்படவுள்ள ஈடுபெற்ற சொத்தின் மீதான எந்தவொரு வில்லங்கமும் RFL-க்கு தெரியாது. விருப்பமுள்ள விலைக்குறிப்பீட்டாளர்கள் சொத்து பற்றிய தனது சொந்த மதிப்பீட்டை தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம். கடன் வழங்கியவர் (RFL) மேற்குறிப்பிட்ட ஈடுபெற்ற சொத்தின் தகுதிக்கு எந்தவொரு உத்திரவாதமும் / பிரதிநிதித்துவமும் அளிக்கவில்லை. ஈடுபெற்ற கடன் வழங்கியவர் (RFL), மேற்கூறிய ஈடுபெற்ற சொத்தின் தகுதி/உரிமை குறித்து எந்த வகையிலும் உத்தரவாதம் அளிக்கவோ அல்லது எந்தவொரு பிரதிநிதித்துவத்தையும் வழங்கவோ இல்லை. இந்தச் சொத்தானது, எந்தவிதப் பாரபட்சமுமின்றி ஏலத்திற்கு வைக்கப்பட்டுள்ளது. மேலும் இது, செயின்ட் பால்ஸ் எஜிகேஷனல் அண்ட் சாரிடபிள் டிரஸ்ட் எதிர் ரெலிகேர் பின்வெஸ்ட் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி தாக்கல் செய்துள்ள TSA எண் 413/2022 வழக்கில், மாண்புமிகு டெல்லி-II கடன் மீட்புத் தீர்ப்பாயத்தின் தீர்ப்புக்கு உட்பட்டது.

விற்பனையின் பிற விபரங்கள்:

1. விற்பனை குறித்த விரிவான விபரங்களுக்கு பாதுகாக்கப்பட்ட கடனளித்த வங்கியின் இணையதளத்தில் பார்வையிடலாம்: https://uat-religarefinvests.webflow.io/auction-notices
2. இ-ஏலம் பற்றிய விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய நபர் M/s. C1 India Pvt. Ltd, Mr. தரணி கிருஷ்ணா – Tel. No.: +91 72919 71124,25,26 மற்றும் Mobile +91-99481 82222; email id – andhra@c1india.com.
3. விருப்பமுள்ள நபர்கள் விண்ணப்பம் / ஏலம் சமர்ப்பிக்கும் விபரங்கள் மற்றும் இதர விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய நபர்கள் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி Mr.K.N.பரமேஷ், Mob: 89396 05467 மற்றும் Mr.R.மனோஜ்குமார், Mob: 99404 46070

தேதி : 15.10.2026
இடம் : கோயம்புத்தூர்
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,
M/s.ரெலிகேர் பின்வெஸ்ட் லிமிடெட்

தூனேரி அணிக்கொரையில் மக்கள் தொடர்பு திட்ட முகாம்

ஆட்சியர் பங்கேற்பு

தூனேரி அணிக்கொரை ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் கற்றல் திறன் குறித்து மாணவர்களிடம் கேட்டறிந்த மாவட்ட ஆட்சியர் லட்சுமி பவ்யா தன்னேரு.

உதகை, அக். 14: உதகை அருகேயுள்ள தூனேரி அணிக்கொரை கிராமத்தில் மக்கள் தொடர்பு முகாம் புதன்கிழமை நடைபெற்றது.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் நடைபெற்ற இந்த மக்கள் தொடர்பு முகாமில் மாவட்ட ஆட்சியர் லட்சுமி பவ்யா தன்னேரு பங்கேற்று 48 பயனாளிகளுக்கு ரூ.1.79 கோடி மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இதில் புதிய குடும்ப அட்டைகள், முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கு உதவித் தொகை, மாவட்ட முன்னோடி வங்கி சார்பில் கல்விக் கடன் மற்றும் மகளிர் சுய உதவிக்குழுவுக்கு கடனுதவி, மத்திய கூட்டுறவு வங்கி மூலம் சுய உதவிக் குழுக்களுக்கு கடன் மற்றும் விவசாயக் கடனுதவி என 48 பயனாளிகளுக்கு ரூ.1 கோடியே 79 லட்சம் மதிப்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. மேலும் இங்குள்ள தொடக்கப்பள்ளியிலும் ஆட்சியர் ஆய்வு மேற்கொண்டார்.

இந்த முகாமில், மாவட்ட வருவாய் அலுவலர் வாசுகி, மகளிர் திட்ட இயக்குநர் ரூபன் சங்கர்ராஜ், உதகை கோட்டாட்சியர் டினு அரவிந்த், மாவட்ட வழங்கல் அலுவலர் சரவணன், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் ராமசாமி, ஊராட்சிகள் உதவி இயக்குநர் சிவசங்கர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

மின்வாரிய கேங்மேன்கள் காத்திருப்பு போராட்டம்

கோத்தகிரி மின்வாரிய அலுவலக வளாகத்தில் காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்ட கேங்மேன்கள்.

உதகை, அக்.14: உதகை, கோத்தகிரி பகுதியில் உள்ள மின்வாரிய கேங் மேன்கள் புதன்கிழமை காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நீலகிரி மாவட்ட மின்வாரியத்தில் பணிபுரியும் கேங்மேன்களுக்கு அவரவர் சொந்த ஊர்களுக்கு பணியிட மாற்றம் உத்தரவு பிறப்பிக்கப்பட்டு பல மாதங்கள் கடந்தும், மின்வாரிய அதிகாரிகள் அந்த உத்தரவை செயல்படுத்தாமல் உள்ளதாக கூறப்படுகிறது.

இந்நிலையில் இந்த உத்தரவை அமல்படுத்த வலியுறுத்தி உதகை, கோத்தகிரியில் உள்ள மின்வாரிய அலுவலகம் முன் கேங் மேன்கள் காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பணியிட மாற்றம் உத்தரவை உடனடியாக அமல்படுத்தி, தாங்கள் எதிர்பார்க்கும் மாவட்டங்களில் தங்களுக்கு பணி வழங்க வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தினர். பேச்சுவார்த்தையில், விரைந்து நடவடிக்கை எடுப்பதாக அதிகாரிகள் உறுதி அளித்ததன்பேரில் போராட்டம் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டது.

உதகையில் சீல் வைக்கப்பட்ட கட்டடத்தை திறந்து கிணறு அமைத்தவருக்கு நோட்டீஸ்

உதகை, அக்.14: உதகையில் அனுமதியின்றி கட்டப்பட்டு வந்த கட்டடத்துக்கு நகராட்சி நிர்வாகம் சீல் வைத்த நிலையில், சீலை அகற்றி அந்த வளாகத்தில் கிணறு தோண்டிய கட்டட உரிமையாளருக்கு நகராட்சி அதிகாரிகள் புதன்கிழமை நோட்டீஸ் வழங்கியுள்ளனர்.

மலை மாவட்டமான நீலகிரி மாவட்டத்தில் கட்டடங்கள் கட்ட பல்வேறு விதிமுறைகள் உள்ளன. மேலும், நிலநடுக்கம் மற்றும் நிலச்சரிவு ஏற்படும் அபாயம் உள்ளதால் கிணறு தோண்ட முற்றிலும் தடை விதிக்கப்பட்டுள்ளது. அதேபோல பொக்லைன் உள்ளிட்ட இயந்திரங்களை இயக்க சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் மற்றும் மாவட்ட நிர்வாகத்திடம் அனுமதி பெற வேண்டும்.

இந்நிலையில் உதகை, குன்னூர் தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ள ஃபன்சிட்டி பகுதியில், வனத்தை ஒட்டி 150 மீட்டருக்குள் எவ்வித கட்டடப் பணிகளும் மேற்கொள்ளக் கூடாது என விதிமுறை உள்ள நிலையில் அதை மீறி அப்பகுதியில் இரண்டு மாடி கட்டடம் கட்டப்பட்டு வந்தது. தகவலறிந்த நகராட்சி அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டு நோட்டீஸ் வழங்கி அந்தக் கட்டடத்துக்கு சீல் வைத்தனர்.

இந்நிலையில் நோட்டீஸ் வழங்கி சீல் வைக்கப்பட்ட கட்டடத்தில், சீலை அகற்றி மீண்டும் கட்டடப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக நகராட்சி அதிகாரிகளுக்கு தகவல் கிடைத்தது. இதைத் தொடர்ந்து நகராட்சி நகர திட்டமிடல் அலுவலர் மகேந்திரன் அப்பகுதிக்கு சென்று ஆய்வு மேற்கொண்டார். இதில் அங்கு கட்டட பணிகள் மேற்கொள்ளப்பட்டதும், அனுமதியின்றி சுமார் 60 அடிக்கு கிணறு தோண்டியுள்ளதும் தெரியவந்தது.

அனுமதியின்றி கிணறு தோண்டியதற்காக வட்டாட்சியரிடம் புகார் தெரிவித்து கட்டட உரிமையாளர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், நோட்டீஸ் வழங்கி சீல் வைத்த கட்டடத்தில் மீண்டும் கட்டட பணிகள் மேற்கொண்டதற்காக சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் நகராட்சி நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

புன்செய்புளியம்பட்டியில் 20 நகராட்சிக் கடைகளுக்கு சீல்

சத்தியமங்கலம், அக். 14: புன்செய்புளியம்பட்டியில் வாடகை செலுத்தாத 20 நகராட்சிக் கடைகளுக்கு அதிகாரிகள் புதன்கிழமை சீல் வைத்தனர்.

புன்செய் புளியம்பட்டியில் நகராட்சிக்கு சொந்தமான 32 கடைகள் உள்ளன. இதில் 20 கடைகளின் வியாபாரிகள் மாதம்தோறும் செலுத்த வேண்டிய வாடகையை சரிவர செலுத்தவில்லை என்று நகராட்சி நிர்வாகம் நோட்டீஸ் விநியோகித்து விளக்கம் கேட்டது. இதற்கு கடை வியாபாரிகள் பதிலளிக்காமல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதையடுத்து கடை வாடகை பாக்கியை செலுத்தாத காரணத்தால் 20 கடைகளை நகராட்சி அலுவலர்கள் சீல் வைத்து பூட்டினர். இதையடுத்து கடை வியாபாரிகள் நகராட்சி அலுவலகம் சென்று அதிகாரிகளிடம் முறையிட்டனர்.

வாடகை பாக்கியை செலுத்தினால் மட்டுமே மீண்டும் கடை ஒப்படைக்கப்படும் என நகராட்சி அதிகாரிகள் தெரிவித்தையடுத்து கடை வியாபாரிகள் திரும்பிச் சென்றனர்.

ஜோதிடரை கொலை செய்தவருக்கு ஆயுள் தண்டனை

திருப்பூர், அக்.14: கிளி ஜோதிடரை கொலை செய்தவருக்கு ஆயுள் தண்டனை விதித்து திருப்பூர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

திருப்பூர் அருகே இடுவாய் பாரதிபுரத்தைச் சேர்ந்தவர் ரமேஷ் (42). இவர் திருப்பூர் பார்க் சாலை நடைமேடையில் அமர்ந்து கிளி ஜோதிடம் பார்த்து வந்தார். இவரிடம் போயம்பாளையம், ராஜா நகரைச் சேர்ந்த ரகு (55) ஜோதிடம் பார்க்க வந்துள்ளார். ரகுவின் சொந்த ஊர் நாகப்பட்டினம் ஆகும். திருப்பூர், ராஜா நகரில் தங்கி பனியன் நிறுவனத்தில் வேலை செய்து வந்தார். அப்போது அதே நிறுவனத்தில் வேலை செய்து வந்த பெண்ணுடன் பழக்கம் ஏற்பட்டுள்ளது.

அந்தப் பெண்ணை விரும்புவதாகவும், தன்னுடன் சேர்ந்து வாழ்வதற்கு வழி செய்து கொடுக்குமாறும் ஜோதிடர் ரமேஷிடம் ரகு கேட்டுள்ளார். அதற்கு அவர் ஜாதகம் பார்த்து பூஜை செய்து அந்தப் பெண்ணுடன் சேர்ந்து வாழ வழி செய்து கொடுத்தார். அதன் பிறகே அந்தப் பெண்ணுக்கு ஏற்கெனவே திருமணம் நடந்திருப்பதும், ரகு தன்னை ஏமாற்றியதும் ஜோதிடர் ரமேஷுக்கு தெரியவந்தது.

பின்னர் ரகுவும், அந்தப் பெண்ணும் 6 ஆண்டுகள் சேர்ந்து வாழ்ந்தனர். இந்த நிலையில் மீண்டும் ஜோதிடர் ரமேஷை பார்க்க ரகு வந்தார்.

அந்தப் பெண் தன்னை விட்டு பிரிந்து, முதல் கணவருடன் சென்றுவிட்டார். மீண்டும் அந்தப் பெண்ணை தன்னுடன் சேர்த்து வைக்க பூஜை செய்யுமாறு ரகு கேட்டுள்ளார். அதற்கு ரமேஷ், ஜாதகப்படி அந்தப் பெண் முதல் கணவருடன்தான் வாழ்வார். இனி உன்னுடன் வாழ வரமாட்டார் எனக் கூறி பூஜை செய்ய மறுத்துவிட்டார்.

இதனால் அடிக்கடி ரமேஷை கைப்பேசி மூலமாக ரகு தொடர்பு கொண்டு அந்தப் பெண்ணை தன்னுடன் சேர்த்து வைக்காவிட்டால் கொலை செய்துவிடுவதாக மிரட்டல் விடுத்து வந்துள்ளார்.

மேலும், ரமேஷின் மனைவி மகாலட்சுமியிடமும் கைப்பேசியில் பேசிய ரகு, அந்த பெண்ணை வசியம் செய்து தன்னுடன் சேர்த்து வைக்காவிட்டால் உனது கணவரை கொலை செய்துவிடுவேன் என்று மிரட்டியுள்ளார். இதனால் ரமேஷ் அச்சத்துடன் இருந்துள்ளார்.

இந்தநிலையில் கடந்த 2018 டிசம்பர் 24-ஆம் தேதி வழக்கம்போல பார்க் சாலை நடைமேடையில் ரமேஷ் ஜோதிடம் பார்த்துள்ளார். பின்னர் மதியம் 12.05 மணிக்கு அங்கிருந்து நடந்து சென்று பென்னி காம்பவுண்டில் உள்ள தேநீர்க் கடை முன்பாக நின்றுள்ளார். அப்போது தலைக்கவசம் அணிந்து மோட்டார் சைக்கிளில் அங்கு வந்த ரகு, அரிவாளால் ரமேஷை வெட்டிவிட்டு தப்பினார். இதில் சம்பவ இடத்திலேயே ரமேஷ் இறந்தார். இதுகுறித்து வடக்கு போலீஸார் வழக்குப் பதிந்து ரகுவை கைது செய்தனர்.

இதுதொடர்பான வழக்கு விசாரணை திருப்பூர் 2-ஆவது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இந்த வழக்கில் ஜோதிடர் ரமேஷை அரிவாளால் வெட்டிக் கொலை செய்த ரகுவுக்கு ஆயுள் தண்டனை, ரூ.10 ஆயிரம் அபராதம் விதித்து நீதிபதி கனகராஜ் புதன்கிழமை தீர்ப்பளித்தார். இந்த வழக்கில் அரசு தரப்பில் அரசு வழக்குரைஞர் பிரபாகரன் ஆஜரானார்.

தோட்டத் தொழிலதிபர் சங்க நிர்வாகிகள் தேர்வு

கோவை, அக். 14: தமிழ்நாடு தோட்டத் தொழிலதிபர் சங்கத்தின் புதிய நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

இது குறித்து அந்த சங்கத்தின் செயலர் பிரதீப் சுகுமார் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாடு தோட்டத் தொழிலதிபர் சங்கத்தின் 73-ஆவது ஆண்டு விழா கூட்டம் கோவையில் அண்மையில் நடைபெற்றது. இதில், 2026 - 2027-ஆம் ஆண்டுக்கான தோட்டத் தொழிலதிபர் சங்கத்தின் தலைவராக நீலகிரி மாவட்டம் கிரைக்மோர் பிளான்டேஷன்ஸ் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் சந்தீப் சிங் சித்து, துணைத் தலைவராக வால்பாறை டாடா காபி நிறுவனத்தின் முதுநிலைப் பொது மேலாளர் பி.பி.அச்சையா ஆகியோரும் தேர்வு செய்யப்பட்டனர்.

இவர்களுடன், சி.ஸ்ரீதரன், முரளி பாலன் படிக்கல், எம்.ஜி.திம்மையா, அனில் ஜார்ஜ் ஜோசப், அனில் மேத்யூ உள்ளிட்ட 21 பேர் அடங்கிய நிர்வாகக் குழுவும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

இந்த கூட்டத்தில், கோவை, நீலகிரி, சேலம், திண்டுக்கல், தேனி, கன்னியாகுமரி மாவட்டங்களைச் சேர்ந்த தோட்ட அதிபர்கள், நிர்வாகிகள் பங்கேற்றனர்.

Arcil
Premier ARC
அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி (இந்தியா) லிட். (ஆர்சில்) CIN-L65999MH2002PLC134884 | இணையத்தளம்: https://auction.arcil.co.in
பல்வேறு ஆர்சில் டிரஸ்டுகளின் டிரஸ்ட்டி எனும் முறையில்
ஆர்சில் அலுவலகம்: தி ரூபி, 10ஆவது தளம், 29, சேனாபதி பாபட் மார்க், தாதர் (மேற்கு), மும்பை - 400 028.
கிளை அலுவலகம்: 1G, 1ஆவது தளம், செஞ்சுரி வளாகம், எண். 560-562, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600018.

பொது அறிவிப்பு-கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 (SARFAESI சட்டம்) அதனுடன் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002, விதிகள் 6, 8 & 9 ஆகியவற்றின் கீழான அதிகாரங்களை பயன்படுத்தி இணையவழி மின் ஏலம் மூலம் நடக்கும் விற்பனைக்கானது.

இதன் மூலம் பொதுமக்களுக்குப் பரவலாகவும் கடன்தாரர்களுக்கு / ஜாமீன்தாரர்களுக்கு / அடமானதாரர்களுக்குக் குறிப்பாகவும் அறிவிப்பது யாதெனில், கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிலுவைத் தொகையை அதன் மேல் வட்டி, கட்டணங்கள், செலவினங்கள் முதலானவற்றுடன் திரும்பப் பெறும் பொருட்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 ("மேற்கூறிய சட்டம்") அதனுடன் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதிகள் 6, 8 & 9 ("மேற்கூறிய விதிகள்") ஆகியவற்றின்படி பல்வேறு ஆர்சில் டிரஸ்டுகளின் டிரஸ்ட்டி எனும் முறையில் செயல்படும் அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி (இந்தியா) லிட்., ("ஆர்சில்") நிறுவனத்திடம் அடமானம் / அடகு வைக்கப்பட்டுள்ளவையும் (பதிவு செய்யப்பட்ட ஒப்படைப்பு ஒப்பந்தங்களின்படி நிதிச் சொத்துக்கள் ஒப்படைப்பு செய்யப்பட்டதன் அடிப்படையில்) கீழே விவரிக்கப்பட்டுள்ளவையுமான அசையாச் சொத்துக்கள் "உள்ளது உள்ள இடத்தில்", "உள்ளது உள்ளபடி", "உள்ள இடத்தில் உள்ள அனைத்தும்", "திரும்பப் பெறப்பட மாட்டாது" எனும் முறையில் இணைய வழி E-ஏலத்தின் மூலம் விற்பனை செய்யப்பட உள்ளன.

வ. எண்	கடன்தாரர் / கூட்டுக்-கடன்தாரர்/கள் / ஜாமீன்தாரர்/கள் / அடமானதாரர்/கள் பெயர்	கடன் கணக்கு எண் / விற்கும் வங்கி	டிரஸ்ட் பெயர்	SARFAESI அறிவிப்பு நாளப்படி நிலுவைத் தொகை	சுவாதீன வகை மற்றும் நாள்	ஆய்வு நாள் மற்றும் நேரம்	சொத்தின் வகை மற்றும் பரப்பு	டேவணித் தொகை (EMD)	குறைந்தபட்ச விலை	E-ஏல நாள் மற்றும் நேரம்
1.	திரு. மெய்நாதன் M, திருமதி. தனபாக்கியம்.M, திரு. சுப்பிரமணியம் ஆறுமுகம்	X0HLGPM000024 72109 சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்	Arcil-2024C - 006 - Trust	ரூ.5770399.49/- (ரூபாய் ஐம்பத்தேழு இலட்சத்து எழுபதாயிரத்து முந்நூற்று தொண்ணூற்று ஒன்பது மற்றும் பைசா நாற்பத்தொன்பது மட்டும்) 26.01.2026 நாளப்படி + மேல்வட்டி + சட்டச் செலவுகள் உட்பட	நேரடி சுவாதீனம் 14.07.2021	02.11.2026 மற்றும் 09.11.2026	மொத்த நிலப் பரப்பளவு: 0.06 ஏக்கர் (6 செண்ட் நிலம்) RCC - 1476.94 சதுர அடி.	ரூ.220600/- (ரூபாய் இரண்டு இலட்சத்து இருபதாயிரத்து அறுநூறு மட்டும்)	ரூ.2206000/- (ரூபாய் இருபத்திரண்டு இலட்சத்து ஆறாயிரம் மட்டும்)	17.11.2026 மாலை 03.00 மணி

ஏலமிடப்பட உள்ள கடனீட்டுச் சொத்தின் விவரம்: சொத்தின் உரிமையாளர்: மெய்நாதன் M : பதிவு மாவட்டம்: கோபிச்செட்டிப்பாளையம், சார்பதிவு மாவட்டம்: கவுந்தப்பாடி, மாவட்டம்: ஈரோடு, வட்டம்: கோபிச்செட்டிப்பாளையம், கிராமம்/ஊராட்சி: ஓடத்துறை கிராமத்தைச் சேர்ந்த R.S.எண்: R.S.எண். 304/2, 4, மொத்தப் பரப்பளவு: 0.06 ஏக்கர் கொண்ட நிலம். எல்லைகள் பின்வருமாறு: O.N. வீரய்யன் சொத்துக்கு மேற்கில்; கிழக்கு மேற்குச் சாலைக்கு வடக்கில்; வடக்குத் தெற்கு பொது வண்டிப்பாதை மற்றும் அரிகரை புறம்போக்கு நிலம் ஆகியவற்றுக்குக் கிழக்கில்; மரகதமணி மற்றும் மைதிலி ஆகியோரின் சொத்துக்குத் தெற்கில். மொத்தம் 0.06 ஏக்கர் கொண்ட நிலம் (6 செண்ட் நிலம்). இத்துடன் அனைத்து சாலைகள் மற்றும் வழிப்பாதையை அணுகும் உரிமைகள் மற்றும் பயன்படுத்தும் அனைத்து இதர புழக்க உரிமைகள் உட்பட. இது கோபிச்செட்டிப்பாளையம் வட்டம், ஓடத்துறை கிராமம், R.S.எண். 304/2, 4-இல் அமைந்துள்ளது. கவுந்தப்பாடி, பதிவு செய்யப்பட்ட அன்பளிப்பு ஒப்படைப்பு ஆவண எண். 1048/2018-இன் சொத்து அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி.

ஆர்சில் நிறுவனத்துக்குத் தெரிந்து நிலுவையில் உள்ள வழக்குகள்:	ஏதுமில்லை	ஆர்சில்-க்கு தெரிந்த வரையில் வில்லங்கம் / நிலுவைகள்	ஏதுமில்லை
ஏலப்புள்ளி தாக்கல் செய்யக் கடைசி நாள்:	16.11.2026 அன்று மாலை 5.00 மணி அல்லது அதற்குமுன்	ஏல உயர்வுத் தொகை	விலைப்புள்ளி ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளபடி
கேட்பு வரைவோலை எடுக்கப்பட வேண்டிய பெயர்:	டிரஸ்ட் பெயர் பத்தியில் குறிப்பிட்டுள்ளபடி	செலுத்தவேண்டிய இடம்: சென்னை	
RTGS விவரங்கள்	கணக்கின் பெயர்: Arcil-2024C-006-Trust, கணக்கு எண்: 57500001480354, கடன் கொடுத்த வங்கி: HDFC வங்கி, IFSC எண்: HDFC0000542, கிளை முகவரி: கமலா மில்ஸ் வளாகம் கிளை, சேனாபதி பாபட் மார்க், லோயர் பரேல் - 400013.		
தொடர்பு நபர் பெயர் மற்றும் எண்	மகேஷ் பங்கேரா - 9004173256 (mahesh.bangera@arcil.co.in), கார்த்திகேயன் ஜெயவேல் - 9841415252 (karthikeyan.jayavel@arcil.co.in), விஜயராஜ் - 9551714945 - (vijayaraj@arcil.co.in)		

விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்:

1. இந்த ஏல விற்பனை ஏல ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் ஆகியவற்றின்படியும் அதில் வரையறுக்கப்பட்டுள்ள செயல்பாடுகளின்படியும் https://auction.arcil.co.in இணையத்தளத்தின் வாயிலாக e-ஏல முறையில் நடத்தப்படும்.
2. விற்பனையின்பொழுது ஏற்படக்கூடிய இணையச் செயலிழப்பு, இணைப்புச் சிக்கல்கள், கணினிப் பழுது, மின்தடை போன்றவற்றுக்கு அதிகாரப்பூர்வ அலுவலர் ("AO") / ஆர்சில் பொறுப்பேற்க முடியாது.
3. ஏலத்தின் எந்தக் கட்டத்திலும் எந்தக் காரணமும் முன்வைக்காமலும் எந்த முன்னறிவிப்பும் இன்றியும் எந்த ஏலப்புள்ளியையும் / விலைகோரலையும் ஏற்க / புறக்கணிக்க / மாற்ற / ரத்துச் செய்ய அல்லது ஏலத்தைத் தள்ளி வைக்க அதிகாரப்பூர்வ அலுவலருக்கு உரிமை உண்டு.
4. உரிய சட்டத்தின்படி கடனீட்டுச் சொத்தினைத் தன் பெயருக்கு மாற்றிக் கொள்ள / பெற்றுக் கொள்ளச் செலுத்த வேண்டிய சட்டப்படியான நிலுவைகள், வரிகள், செலுத்துகைகள், சொத்து வாங்கியதற்கான சரக்கு மற்றும் சேவை வரி (GST), முத்திரைத் தீர்வை, பதிவுக் கட்டணம் போன்றவை வெற்றி பெறும் வாங்குநரை / ஏலதாரரையே சாரும்.
5. விருப்பமுள்ள ஏலதாரர்கள் தங்கள் ஏலப்புள்ளியைத் தாக்கல் செய்யும் முன் கடனீட்டுச் சொத்தின் உடைமைத்தன்மை, வில்லங்கங்கள், சட்டப்படியான நிலுவைகள் முதலான கடனீட்டுச் சொத்தைப் பாதிக்கக்கூடிய உரிமைகோரல்கள் / உரிமைகள் / கடன்கள் ஆகியவை குறித்துத் தாங்களே சொந்தமாகத் தீர விசாரித்துக் கொள்ள வேண்டும். இந்த ஏல விளம்பரம் ஆர்சில் சார்பாக எந்தப் பொறுப்பையோ பிரதிநிதித்துவத்தையோ இப்பொழுதோ இனிமேலோ ஏற்றுக் கொள்ளவோ வழங்கவோ இல்லை. எந்த மூன்றாம் தரப்பு உரிமைகோரலுக்கும் / உரிமைக்கும் / நிலுவைத் தொகைக்கும் ஆர்சில் நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ அலுவலர் எந்த வகையிலும் பொறுப்பாக முடியாது.
6. நாளிதழில் வெளியிடப்பட்டுள்ள ஏல அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்கள் கீழே கையொப்பமிட்டுள்ளவருக்கு உச்சபட்சமாகத் தெரிய வந்த தகவல்களின் அடிப்படையிலானவை. எனவே இவற்றில் ஏதேனும் பிழையோ முரண்பாடோ விடுபாடோ இருப்பின் அதற்குக் கீழே கையொப்பமிட்டுள்ளவர் பொறுப்பாக முடியாது.
7. மேற்குறிப்பிட்ட நிலுவைத் தொகைக்குப் பொறுப்பான கடன்தாரர் / ஜாமீன்தாரர்கள் / அடமானதாரர்கள் இந்த விற்பனை அறிவிப்பினை மேற்கண்ட ஏல விற்பனை நடைபெற உள்ளது குறித்த கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதிகள் 8, 9 ஆகியவற்றின் கீழ் விடுக்கப்படும் அறிவிப்பாகவும் கருதிக் கொள்ள வேண்டும்.
8. எந்தக் காரணத்தினாலாவது மேலே அட்டவணையிடப்பட்டுள்ளபடி ஏலம் நடைபெறத் தவறினால் மேற்கூறிய சட்டம் மற்றும் விதி 8(5)-இன்படி கடனீட்டுச் சொத்தினை இதர வழிமுறைகளில் விற்பனை செய்ய ஆர்சில் நிறுவனத்துக்கு உரிமை உண்டு.

இடம்: சென்னை
நாள்: 15.10.2026
ஒம்/-
அதிகாரப்பூர்வ அலுவலர்,
அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி (இந்தியா) லிட்.

மின்னணுக் கழிவுகளை சேகரிக்க ஏற்பாடு

மாநகராட்சி ஆணையர் தகவல்

ஈரோடு, அக்.14: ஈரோடு மாநகராட்சியில் வாரம்தோறும் புதன்கிழமை அன்று மின்னணு கழிவுகள் சேகரிக்கப்படும் என மாநகராட்சி ஆணையர் அர்பித் ஜெயின் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் கூறியதாவது:

மின்னணுக் கழிவுகளை முறையாக அப்புறப்படுத்தாமல் திறந்தவெளியில் வீசும்போது அதிலுள்ள ரசாயனங்கள் மற்றும் நச்சுப் பொருள்கள் மண் மற்றும் நிலத்தடி நீரில் கலந்து உணவுச் சங்கிலி மூலம் மனிதர்களின் உடல்நலத்தை பாதிக்கும் அபாயம் உள்ளது.

இதனால் சுற்றுச்சூழலுக்கும், மனித ஆரோக்கியத்திற்கும் ஏற்படும் பாதிப்புகளைத் தவிர்க்க, மின்னணுக் கழிவுகளை தனியாக சேகரித்து முறையாக மறுசுழற்சிக்கு அனுப்புவது குறித்து பொதுமக்களிடம் தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் மின்னணுக் கழிவுகளின் அளவு அதிகரிக்கும் என்பதால் உள்ளாட்சி அமைப்புகள் மூலமாக மின்னணுக் கழிவுகளை தனியாக சேகரிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஈரோடு மாநகராட்சியில் வாரம்தோறும் புதன்கிழமை அன்று மின்னணு கழிவுகள் சேகரிக்கப்படும். சேதம் அடைந்த தொலைக்காட்சி, குளிர்சாதனபெட்டி, துணி துவைக்கும் இயந்திரம், மின் விசிறிகள், மின் விளக்குகள், சுவிட்ச் போர்டுகள் உள்ளிட்டவை சேகரிக்கப்பட்டுள்ளன.

இந்தக் கழிவுகள்,வெண்டிபாளையத்திலுள்ள குப்பைக் கிடங்கில் புதிதாக கட்டப்பட்டுள்ள மையத்தில் சேகரித்து வைக்கப்பட்டு 6 மாதங்களுக்கு ஒருமுறை மறுசுழற்சி மையத்துக்கு அனுப்பப்படும். மின்னணுக் கழிவுகளை முறையாக சேகரித்து மறுசுழற்சிக்கு அனுப்புவதன் மூலம் சுற்றுச்சூழல் பாதிப்புகளை கணிசமாக குறைக்க முடியும்.

மின்னணுக் கழிவுகள் இல்லாத தூய்மையான தமிழகத்தை உருவாக்க பொதுமக்கள் ஒத்துழைக்க வேண்டும்.

மாநகராட்சியிலுள்ள பொதுமக்கள், தனியார் நிறுவனங்கள், தொழிற்சாலைகளில் உபயோகப்படுத்திய கழிவு செய்யப்பட்ட மின்சாதனங்களை கொடுத்து தூய்மையான ஈரோடாக மாற்ற முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும். மின்னணுக் கழிவுகளை சேகரிக்க 4 மண்டலங்களிலும் சிறப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது என்றார்.